# Annual Examination - 2020-2021

**Tamil**

**Grade: 9** **Time: 3 Hours**

**Date: 18.02.2021** **Max. Marks: 80**

**இக் கேள்வித் தாள் இரண்டு பிரிவுகளைக் கொண்டது:-**

**பகுதி: அ - 40 மதிப்பெண்கள்**

**பகுதி: ஆ - 40 மதிப்பெண்கள்**

- ✓ **எல்லா வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்கப்பட வேண்டும்.**
- ✓ **ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிக்கப் பட்டுள்ளன.**

## பகுதி - அ – 40 மதிப்பெண்கள்

**I. அ) கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும்.** [5X1=5]

ஒரு நாள் இங்கிலாந்து நாட்டில் ரபீந்ரநாத் தாகூர் ஓர் ஏழை மனிதன் தெருஓரமாக நின்று கொண்டிருப்பதை பார்த்தார். அவன் அணிந்திருந்த காலணிகள் கிழிந்து வெளியில் விரல்கள் தெரிந்து கொண்டிருந்தன. அந்த கால கட்டத்தில் பிச்சை எடுப்பது தடை செய்யப் பட்டிருந்தது. அதனால் அம்மனிதர் எதுவும் பேசாமல் தாகூரையே உற்று நோக்கிக்கொண்டிருந்தான். தாகூர் அம்மனிதன் மேல் பரிதாபப் பட்டு ஒரு தங்க நாணயத்தை அவனிடம் கொடுத்து விட்டு நகர்ந்தார். அவனோ தாகூர் தவறுதலாகத்தான் நாணயத்தைக் கொடுத்துவிட்டு சென்றார் என்று ஏழை மனிதன் நினைத்துக் கொண்டு, அவர் கொடுத்த தங்க நாணயத்தை அவரிடமே கொடுத்துவிட்டு சென்றார். இதனை சற்றும் எதிர்பாராத தாகூர் அம்மனிதனின் நேர்மையைக் கண்டு வியந்தார்.

**வினாக்கள்**

1. இரபீந்ரநாத் தாகூர் எந்நாட்டிற்குச் சென்றார்?

   அ) போலந்து   ஆ) இங்கிலாந்து

   இ) பின்லாந்து   ஈ) அயர்லாந்து

2. இங்கிலாந்தில் எது தடை செய்யப்பட்டிருந்தது?

   அ) பணம் கொடுப்பது   ஆ) சோறு கொடுப்பது

   இ) ஆடை கொடுப்பது   ஈ) பிச்சை எடுப்பது

3. ஏழையின் எச்செயலைக் கண்டு வியந்தார் தாகூர்?

அ) நேர்மையை ஆ) நிதானத்தை

இ) வைராக்கியத்தை ஈ) நகைச்சுவையை

4. தாகூர் அம்மனிதனுக்கு என்ன கொடுத்தார்?

அ) வெள்ளி நாணயத்தை ஆ) பித்தளை நாணயத்தை

இ) தங்க நாணயத்தை ஈ) வைர நாணயத்தை

5. தாகூர் யாரைத் தெருவோரமாகப் பார்த்தர்?

அ) ஓர் பெண்ணை ஆ) ஓர் ஏழை மனிதனை

இ) ஒரு மனிதனை ஈ) ஓர் பணக்காரனை

**(அல்லது)**

**ஆ) கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும்.**

தமிழகம் சங்க காலத்தில் மக்கள்தம் வாழ்வொழுக்கங்களை அடிப்படையாகக் கொண்டு குறிஞ்சி, முல்லை முதலிய ஐந்நிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இந்த ஐந்திணை மக்களுள் ஆயர் தமக்குள் ஒருதலைவனை அமைத்துக் கொண்டு அவனைக் 'கோ' என்னும் பெயரால் அழைத்தனர் என்றும், மருத நில மக்கள் தமக்குள் ஒரு தலைவனை ஏற்படுத்தி அவனை 'வேள்' என்னும் பெயரால் அழைத்தனர் என்றும் அறிஞர் கூறுவர். 'கோ' எனத் தலைவனை அழைத்த இடையர்குல மக்கள் நாளடைவில் அவனைக் 'கோன்' என அழைத்தனர். மருத நிலம் கழனிகள் நிறைந்த நிலமாதலால் மற்ற நிலங்களைக் காட்டிலும் உயர்ந்திருந்தது. மருத நிலத்துத் தலைவனே எல்லா மக்களுக்கும் தலைவனாக – அரசனாக விளங்கினான் என்றும் அறிஞர் கூறுவர்.

**வினாக்கள்**

1. தமிழர் வாழ்வு ஒழுக்கம் எதன் அடிப்படையில் அமைந்திருந்தது?

அ) மூன்று நிலங்கள் ஆ) ஆறு பொழுதுகள்

இ) ஐந்து நிலங்கள் ஈ) ஆண்டுகள்

2. ஆயர்குலத் தலைவன் பெயர் என்ன?

அ) வஞ்சி ஆ) மாதவன்

இ) கோ ஈ) உயர்ந்தான்

3. மருத நில மக்களின் தலைவன் பெயர் என்ன?

அ) வேள் ஆ) அதியமான்

இ) பாரி ஈ) முல்லை

4. அரசனாக விளங்கியவன் ___________.

அ) முல்லை நிலத் தலைவன் ஆ) நெய்தல் நிலத் தலைவன்

இ) மருத நிலத் தலைவன் ஈ) காஞ்சி நிலத் தலைவன்

5. 'கோ' என்னும் பெயர் நாளடைவில் எவ்வாறு மாறியது?

அ) வியாசர் ஆ) கோன்

இ) இலவன் ஈ) மாமனிதன்

**II- அ) கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும்.** [5X1=5]

பதினோரம் நூற்றாண்டின் இறுதியில் எழுந்த கலிங்கத்துப்பரணி என்ற நூலினை பரணிக்கோர் செயங்கொண்டான் பாடினார். முதற்குலோத்துங்கனது கலிங்க வெற்றியைக் கூறும் இந்நூலின் கண்ணுள்ளகடை திறப்பு என்னும் பகுதி இன்பச் சுவை நிறைந்ததாகும். போரில் ஆயிரம் வென்ற வீரனைப் பாடும் நூல் பரணியாகும் பரணி என்னும் பிரபந்தவகையுள் இந்நூலே முதல் நூலாகவும் சிறந்தும் விளங்குகின்றது. தக்கையாப் பரணி, அஞ்ஞவதைப்பரணி, பாசவதைப்பரணி முதலானபரணி நூல்களும் தமிழில் உள்ளன. கடவுள் வாழ்த்து, கடைதிறப்புகாடு பாடியது, தேவியைப்பாடியது முதலான உறுப்புக்களைப்பரணி என்னும் பிரபந்தம் கொண்டிருக்கும். செந்நெருப்பினைத் தகடு செய்துபார். செய்துபார் செய்தது ஒக்கும் அச்செந்தரைப் பரப்பு எனப் பாலை நிலம் சயங்கொண்டாரால் அழகுற வருணிக்கப்படுகின்றது.

**வினாக்கள்**

1. பரணி என்பது எந்த நூல் வகையைச் சார்ந்தது?

அ) பிரபந்தம் ஆ) திருக்குறள்

இ) ஐங்குறுநூல்கள் ஈ) காப்பியங்கள்

2. கலிங்கத்துப் பரணி நூல் எழுதப்பட்ட காலம் எந்த நூற்றாண்டு?

அ) 8ஆம் நூற்றாண்டு ஆ) 10ஆம் நூற்றாண்டு

இ) 11ஆம் நூற்றாண்டு ஈ) 5ஆம் நூற்றாண்டு

3. கலிங்கத்துப் பரணி நூலை எழுதியவர் யார்?

அ) கலிங்கர் ஆ) அசோகர்

இ) சயங்கொண்டார் ஈ) மாமல்லர்

4. போரில் ஆயிரம் யானைகளை வென்ற வீரனைப் புகழ்ந்து பாடுவது?

அ) தரணி ஆ) பரணி

இ) தாலாட்டு ஈ) ஒப்பாரி

5. இப்பத்தியில் செயங்கொண்டாரால் வருணிக்கப்பட்ட நிலம் எது?

அ) நெய்தல் ஆ) முல்லை

இ) பாலை ஈ) போர்முனை

**(அல்லது)**

**ஆ) கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும்.**

சிலப்பதிகாரத்திற்கு அடுத்ததாக இலக்கிய அழகில் பெருமைவாய்ந்த மணிமேகலை, ஐம்பெரும் தமிழ் காப்பியங்களுள் ஒன்றாகும். இக்காப்பியத்தின் தலைவி, மணிமேகலை, மாதவியின் மகளாவாள். கோவலனின் துயர மரணத்திற்குப் பிறகு மாதவி தன் மகளை ஒரு புத்தத் துறவியாக வளர்த்தாள். ஒரு சமயத்தில் மணிமேகலையும் அவளுடைய தோழியும் பூப்பறிக்கச் சென்றிருந்தபோது, உதயகுமரன் என்ற சோழ மன்னன் மணிமேகலையின் மீது காதல் மயக்கம் கொண்டான். கடலின் கடவுளான மணிமேகலா, மணிமேகலையின் உலக இன்பங்கள் துறந்த வாழ்க்கையைப் பாதுகாக்க, அவளை தான் அறியாமலே மணிபல்லவம் என்ற தீவில் கொண்டு விட்டாள். அத்தீவில் மணிமேகலை ஒரு புத்த பீடிகை மூலம் தனது முன்பிறப்பைப் பற்றி அறிந்தாள். அதன் பிறகு, கடலின் கடவுள் மணிமேகலா, மணிமேகலையிடம் அவள் ஏன் மணிபல்லவத்திற்கு அழைத்து வரப்பட்டாள் என்பதைக் கூறி, மூன்று அதிசய மந்திரங்களையும் கற்றுக்கொடுத்தாள். அத்தீவில் மணிமேகலை 'அமுத சுரபி' என்ற உணவுக் கிண்ணத்தைக் கண்டெடுத்து, அதிலிருந்து அளவற்ற உணவை புகார் நகரிலுள்ள ஏழைஎளியோருக்கு வழங்கினாள்.

**வினாக்கள்:-**

1. ஐம்பெரும் தமிழ் காப்பியங்களுள் ஒன்று ____________.

அ) திருக்குறள் ஆ) குடும்ப விளக்கு

இ) மணிமேகலை ஈ) புறநானூறு

2. மணிமேகலா தெய்வம் மணிமேகலையை எத்தீவிற்கு அழைத்துச் சென்றது?

அ) மணிபல்லவம் ஆ) இலங்கை

இ) கச்சத் தீவு ஈ) அந்தமான்

3. மாதவி தன் மகளை எவ்வாறு வளர்த்தாள்?

அ) சமண துறவியாக ஆ) வைணவ துறவியாக

இ) வைஷ்ண துறவியாக ஈ) புத்தத் துறவியாக

4. மணிமேகலையின் மீது காதல் கொண்ட மன்னன் யார்?

அ) கண்ணன் ஆ) உதயகுமரன்

இ) இளயகுமரன் ஈ) செல்வகுமார்

5. புகார் நகரிலுள்ள ஏழைஎளியோருக்கு எதன் மூலம் மணிமேகலை உணவளித்தாள்?

அ) அமுத சுரபி ஆ) வைர சுரபி

இ) வெண்சங்கு ஈ) தங்கத் தட்டு

**III. சான்று தருக.** (எவையேனும் **நான்கனுக்கு** மட்டும்) [4X1=4]

1. இயல்புப்புணரச்சி

அ) வாழைமரம் ஆ) பொற்குடம்

இ) தமிழ்ப்புத்தகம் ஈ) வண்டழகு

2. பன்மை விகுதிகள்

அ) அத்து, அற்று ஆ) கள், மார்

இ) தல், அம் ஈ) கிறு, கின்று

3. மழை **மண்ணை** சேராக செய்தது.

அ) தன்வினை ஆ) காரணவினை

இ) பிறவினை ஈ) வினையடி

4. நான் நன்றாக பேசினேன் – என்பது எவ்வகைத் தொடர்?

அ) தன்வினைத் தொடர் ஆ) பிறவினைத் தொடர்

இ) செய்வினைத் தொடர் ஈ) செயப்பாட்டு வினைத்தொடர்

5. நிலைமொழி ஈற்று உயிரும் வருமொழி முதல் உயிரும் இணையும் போது ______ எழுத்துகள் இடையில் தோன்றும்.

அ) ப், ம் ஆ) ச், வ்

இ) அ, இ ஈ) வ், ய்

**IV. கூறியவாறு செய்க.** (எவையேனும் **நான்கனுக்கு** மட்டும்) [4X1=4]

1. 'படியுங்கள்' இச்சொல்லின் வினையடி.

அ) படி ஆ) உங்கள்

ஆ) பாடி ஈ) பஇடி

2. பூ + சோலை [சேர்த்து எழுதுக]

அ) பூச்சோலை ஆ) பூசோலை

இ) பூம்சோலை ஈ) பூஞ்சோலை

3. 'செய்வித்தான்' – காரணவினையாக்குக.

அ) செய்தான் ஆ) செய்வான்

இ) செய்யவைத்தான் ஈ) செய்வேன்

4. மிக நன்று (உரிச்சொல்லாக்குக)

அ) மிக்க நல்லது ஆ) நனி நன்று

இ) மிக சிறந்தது ஈ) உறு நன்று

5. மரம் + வேர் = (விகாரப் புணர்ச்சியாக மாற்றுக)

அ) மரம்வேர் ஆ) மாவேர்

இ) மரவேரு ஈ) மரவேர்

**V. இலக்கணக் குறிப்புத் தருக.** (எவையேனும் **நான்கனுக்கு** மட்டும்) [4X1=4]

1. மெய்ம்முன் உயிர்

அ) ஆலிலை ஆ) பணிக்காற்று

இ) மரக்கிளை ஈ) மணியடி

2. திருத்தினான்

அ) காரணவினை ஆ) செய்வினை

இ) பிறவினை ஈ) தன்வினை

3. 'இராமா ஓடு'

அ) எழுவாய் தொடர் ஆ) விளித் தொடர்

இ) கட்டளைத் தொடர் ஈ) அடுக்குத் தொடர்

4. சித்திரைத்திங்கள்

அ) உவமைத்தொகை ஆ) உம்மைத்தொகை

இ) பண்புத்தொகை ஈ) இரு பெயரொட்டுப் பண்புத்தொகை

5. கிழக்குப் பகுதி

அ) காலப்பெயர் ஆ) இடப்பெயர்

இ) பண்புப்பெயர் ஈ) திசைப்பெயர்

**VI. நிரப்புக.** (அனைத்து வினாக்களுக்கும் விடையளி) [4X1=4]

1. ‘ஆல்’ என்பது _________ வேற்றுமை உருபாகும்.

அ) ஐந்தாம் ஆ) இரண்டாம்

இ) ஆறாம் ஈ) மூன்றாம்

2. கூட்டுவினைகள் பொதுவாக __________ வகையாக ஆக்கப்படுகின்றன.

அ) ஐந்து ஆ) மூன்று

இ) இரண்டு ஈ) நான்கு

3. உயிரொலி ஒன்று சேர்ப்பதற்கு அங்கு ஒரு மெய் தோன்றும். இதனை __________ என்று சொல்வர்.

அ) குற்றியலுகரம் ஆ) உயிரீறு

இ) உடம்படுமெய் ஈ) உயிர்முதல்

4. வல்லெழுத்துகள் ________________ ஆகிய நான்கும் மொழிக்கு முதலில் வரும்.

அ) க, ச, த, ப ஆ) ங, ஞ, ண, ந

இ) ய, ர, ல, வ ஈ) க, ம, வ, ய

**VII. கீழ் வரும் செய்யுட் பகுதியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடையளிக்க.** [5X1=5]

கல்லிடைப் பிறந்த ஆறும்
    கரைபொரு குளனும் தோயும்
முல்லைஅம் புறவில் தோன்று
    முருகுகான் யாறு பாயும்
நெல்லினைக் கரும்பு காக்கும்
    நீரினைக் கால்வாய் தேக்கும்
மல்லல்அம் செறுவில் காஞ்சி
    வஞ்சியும் மருதம் பூக்கும்

**வினாக்கள்**

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள செய்யுள் பகுதி ____________.

அ) நாச்சியார் திருமொழி ஆ) தமிழ்விடு தூது

இ) புறநானூறு ஈ) இராவண காவியம்

2. கரிக்குருத்து என்பதன் பொருள் ___________ ஆகும்.

அ) வைக்கோற்போர் ஆ) யானைத்தந்தம்

இ) தென்னைகுருத்து ஈ) தாமரை

3. இப்பாடலின் ஆசிரியர் பெயர் ______________.

அ) ஈரோடு தமிழன்பன் ஆ) கவிஞர் தமிழ் ஒளி

இ) புலவர் குழந்தை ஈ) சேக்கிழார்

4. கரும்பு எப்பயிரைக் காக்கிறது?

அ) நெல் ஆ) வாழை

இ) பாக்கு ஈ) சோளம்

5. இப்பாடல் எந்நிலத்தின் இயற்கை வளத்தை சுட்டுக்காட்டுகிறது?

அ) குறிஞ்சி ஆ) முல்லை

இ) பாலை ஈ) மருதம்

VIII. **கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும்.** [5X1=5]

பல்லவர் காலத்தில் சுதையினாலும், கருங்கற்களினாலும் சிற்பங்கள் அமைக்கப்பட்டன. கோவில் தூண்கள் சிற்பங்களால் அழகு பெற்றன. தூண்களில் யாளி. சிங்கம், தாமரை மலர், நுட்பமான வேலைப்பாடுகள் நிறைந்த வட்டங்கள் போன்றவை பொறிக்கப்பட்டன. பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்ட கோவில்களின் கட்டடங்கள், கற்றூண்கள், சுற்றுச்சுவர்கள், நுழைவு வாயில்கள் என அனைத்து இடங்களிலும் சிற்பங்கள் மிளிர்வதைக் காண முடியும்.

பல்லவர் காலச் சிற்பக்கலைக்கு மாமல்லபுரச் சிற்பங்கள் மிகச் சிறந்த சான்றுகளாகும். கடற்கரையில் காணப்பட்ட பெரும் பாறைகளைச் செதுக்கிப் பற்பல உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு உருவாக்கப்பட்ட பஞ்ச பாண்டவர் இரதங்களில் அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் பல்வேறு உருவச் சிற்பங்களும் பல்லவர்களின்

சிற்பக்கலைப் பெருமையை உலகுக்கு உணர்த்துகின்றன. காஞ்சி கைலாசநாதர் கோவில் சுற்றுச்சுவர் சிற்பங்களின் கலைக்கூடமாகத் திகழ்கிறது.

**வினாக்கள்**

1. பல்லவர் காலச் சிற்பக்கலைக்கு ___________ மிகச் சிறந்த சான்றுகளாகும்.

அ) மலைக்கோவில் சிற்பங்கள் ஆ) மலைக் குன்றுகள்

இ) மாமல்லபுரச் சிற்பங்கள் ஈ) குடைவரைக் கோயில்கள்

2. பல்லவர்களின் சிற்பக்கலைப் பெருமைக்கு ___________, ___________ உருவச் சிற்பங்களும் சான்று.

அ) அருவி, ஆறு ஆ) பறவைகள், விலங்குகள்

இ) அருவி, காட்டாறு ஈ) ஆறு, விலங்குகள்

3. “சுதை” என்பதன் பொருள் __________ ஆகும்.

அ) சுண்ணாம்பு ஆ) சிமெண்ட்

இ) சுவர் ஈ) மண்

4. கடற்கரையில் காணப்பட்ட பெரும் _______________ செதுக்கிப் பற்பல உருவங்கள் அமைக்கப்பட்டன.

அ) மணல் போக்கிகளை ஆ) தடுப்பணைகளை

இ) பாறைகளை ஈ) கிணறுகளை

5. _________ கோவில் சுற்றுச்சுவர் சிற்பங்களின் கலைக்கூடமாகத் திகழ்கிறது.

அ) காஞ்சி விஸ்வநாதர் ஆ) காஞ்சி காமாட்சி

இ) காஞ்சி மாரியம்மன் ஈ) காஞ்சி கைலாசநாதர்

**IX. கீழ்க்காணும் திருக்குறள்களில் விடுபட்ட சீர்களைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.** [4X1=4]

1. அகழ்வாரைத் தாங்கும் ______________ தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

அ) செய்யினும் ஆ) பயத்தலால்

இ) அல்லார் ஈ) நிலம்போலத்

2. மிகுதியான் ____________ செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

அ) கேள்வியர் ஆ) மிக்கவை

இ) குற்றமும் ஈ) நல்லவை

3. சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்

________ உழவே தலை.

அ) எழுவாரை ஆ) மாற்றாரை

இ) உழந்தும் ஈ) கண்டானாம்

4. ____________ கோடி பெறினும் குடிப்பிறந்தார்

குன்றுவ செய்தல் இலர்.

அ) அடுக்கிய ஆ) உழுவார்

இ) ஆற்றுவார் ஈ) இன்பத்துள்

**பகுதி - ஆ – 40 மதிப்பெண்கள்**

**X. விடையளிக்க** (ஏதேனும் **இரண்டனுக்கு** மட்டும்) [2X3=6]

அ) மருத நில வயலின் செழிப்பிற்கான காரணத்தை எழுதுக.

ஆ) குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக.

இ) சான்றாண்மையின் சிறப்புகளைத் தொகுத்தெழுதுக.

ஈ) உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

**XI. விரிவான விடையளி:-** (ஏதேனும் **மூன்றனுக்கு** மட்டும்) [3X4=12]

அ) நீர்ச்சிக்கலை எதிர்கொள்ளும் சிறந்த வழிமுறைகளை எழுதுக.

ஆ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.

இ) வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாள நீட்சியை விளக்குக.

ஈ) மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.

உ) நாயக்கர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள் யாவை?

**XII. கதைப் பகுதி - விரிவான விடையளி:-** (ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும்) [1X7=7]

அ) தண்ணீர்

ஆ) விண்ணையும் சாடுவோம்

இ) வீட்டிற்கோர் புத்தகசாலை

XIII. **கீழ்க்காணும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.** [3]



XIV. **கீழே கொடுக்கப்பட்டுள்ள கடிதங்களில் ஏதேனும் ஒன்று எழுதுக.** [1X6=6]

அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) மாநில அளவில் நடைபெற்ற “மரம் இயற்கையின் வரம்” என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

**இரண்டு கடிதங்களிலும் உமது முகவரி:**

- அன்பரசன் / அன்பரசி, 50. குமரன் நகர், முதல் தெரு, திருச்சி. என்று கொள்க.

XV. **ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.** [1X6=6]

அ) முன்னுரை- சுற்றுச் சூழல் – சுகாதாரம் – தனிமனித சுத்தம் – வீடு – தூய்மையானால் – நாடும் தூய்மையாகும் – நோய்கள் வராமல் தடுக்க – மாசுநீக்குவோம் - முடிவுரை.

ஆ) கல்வி – கல்வியின் சிறப்புகள் – கற்றவர் சிறப்பு – கல்லாதவர் இழிவு – கல்வியின் பயன்கள் – சங்ககாலக் கல்வி – சங்ககாலப் புலவர்கள் – சங்க இலக்கியங்கள்.

இ) முன்னுரை – உணவுதரும் தொழில் – உழவர் உலகத்தார்க்கு ஆணி – இந்தியா கிராமங்களில் வாழ்கிறது – இன்றைய நிலை – விளைநிலங்கள் வீடு ஆதல் – செயற்கை உரம் தரும் சீரழிவு – வெள்ளமும் வறட்சியும் – நகரம் நோக்கி நகர்தல் – தீர்வு – முடிவுரை

---